**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 13/2024 | வா.சா. | : 1 |
| பெயர் | : அமுதா | க/பெ. | : வெள்ளைச்சாமி |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : சோழகுளத்துப்பட்டி |
| தேதி | : 01.11.2025 | வயது | : 38/2025 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

**<u>3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி...</u>**

10) வழக்கறிஞர் திரு.சுப.இளவரசு என்பவர் கடந்த 07.10.2016ம் தேதி எனக்காக 3ம் பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு குறித்த விபரம் தெரிய வரும் என்பதால்தான் அவரை சாட்சியாக விசாரித்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்பதால்தான் அவரை விசாரிக்க தயாராக இல்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி எனது தந்தை என்றாலும், 2ம் பிரதிவாதி எனது உடன்பிறந்த சகோதரர் என்றாலும் சரிதான். குமார் என்பவர் எனது அண்ணன், அவர் இறந்துவிட்டார். 1, 2 பிரதிவாதிகள் மற்றும் குமார் ஆகியோர் 3ம் பிரதிவாதிக்கு கடந்த 19.05.1997ம் தேதி கிரையம் செய்து கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 3ம் பிரதிவாதியை எதற்காக இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சொத்தை பிரித்து தர சொல்லி 1, 2 பிரதிவாதிகளிடம் கேட்டபோது சொத்தை 3ம் பிரதிவாதிக்கு விற்றுவிட்டதாக சொன்னதால் அவரை இந்த வழக்கில் சேர்த்துள்ளேன்.

11) எனக்கு திருமணம் ஆனது முதல் எனது கணவருடன் சோழகுளத்துப்பட்டியில் வசித்து வருகிறேன். வழக்கு சொத்துக்களை பிரித்து தர சொல்லி சட்ட அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால் இல்லை. பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சர்வே எண்.20/14A தென்மேற்கு மூலையில் 1ம் பிரதிவாதிக்கு அவருடைய சகோதரர் நல்லியப்பனுக்கு பொது

பாத்தியப்பட்ட 2 செண்ட் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் நல்லியப்பன் என்பவரை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நல்லியப்பன் மற்றும் அவரது வாரிசுதாரர்கள் அவசிய தரப்பினர்கள் என்றாலும், உரிய தரப்பினர்களை கட்சி சேர்க்காத தோஷத்தால் வழக்கு பாதிப்படைந்துள்ளது என்றால் சரியல்ல.

12) 2005ம் வருடம் எனக்கு 18 வயது முடிவடைந்திருக்கும் என்றால் சரிதான். நான் உரிய வயது அடைந்த பிறகு 3 வருட காலத்திற்குள் 1997ம் வருடத்திய கிரைய ஆவணத்தைக் குறித்து எவ்வித சட்டப்படியான நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். உரிய காலகட்டத்திற்குள் வழக்கு சொத்து சம்பந்தமாக உரிய நடவடிக்கை எதுவும் எடுக்காத காரணத்தினால் தற்போது இந்த வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றாலும், காலதோஷத்தால் பாதிப்படைந்துள்ளது என்றாலும் சரியல்ல. கடந்த 07.10.2016ம் தேதியிட்டு சுப.இளவரசு வழக்கறிஞரை வைத்து 3ம் பிரதிவாதிக்கு கிரைய ஆவணத்தை ரத்து செய்யக்கோரி சட்ட அறிவிப்பு அனுப்பிய பிறகும், 3 வருட காலத்திற்குள் எவ்வித வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்பதனாலும், இந்த வழக்கு கால வரையறை சட்டத்தால் பாதிப்படைந்துள்ளது என்றாலும் சரியல்ல.

13) பூர்வீக சொத்துக்கள் எத்தனை இருக்கும் என்றால் 4, 5 இருக்கும். பூர்வீக சொத்துக்கள் சுமார் 20க்கும் மேல் இருக்கும் என்றாலும், அதில் பாகப்பிரிவினை எதுவும் கோராமல் 3ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ள இந்த வழக்கு சொத்தை பொறுத்து மட்டும் பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு பகுதி பாகப்பிரிவினை தோஷத்தால் பாதிப்படைந்துள்ளது என்றால் சரியல்ல, எனது தந்தையான 1ம் பிரதிவாதி மீது ராஜேந்திரன் என்பவர் வழக்கு சொத்தை தவிர்த்து மற்ற குடும்ப சொத்துக்களைப் பொறுத்து பாகம் கேட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. நான் உரிய வயது அடைந்ததற்கு பிறகு

மூன்று வருட காலத்திற்குள் வழக்கை தாக்கல் செய்யாத காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

14) 1, 2 பிரதிவாதிகள் மற்றும் குமார் ஆகியோர் தகுந்த பிரதிபிரயோஜனம் பெற்றுக் கொண்டு 3ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்தைப் பொறுத்து கிரையம் செய்து கொடுத்தது பற்றி எனக்கு தெரிந்திருந்தும் வேண்டுமென்றே அதை மறைத்து மூன்றாம் பிரதிவாதியிடமிருந்து பணம் பெறும் நோக்கில் 1, 2 பிரதிவாதிகளின் தூண்டுதலின் பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மூன்றாம் பிரதிவாதி அவர் கிரயம் பெற்ற காலம் முதல் தற்பொழுது வரை தனது தனித்த அனுபவத்தில் வைத்து சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. மூன்றாம் பிரதிவாதி 19.05.1997 ஆம் தேதி நல்லெண்ணத்தின் பேரில் கிரையம் பெற்றுள்ளதால் அவர் நல்லெண்ண கிரையதாரர் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் உரிமையாளர் 3ம் பிரதிவாதிதான் என்றாலும், இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. சட்ட அறிவிப்பு 2016 ஆம் வருடம் அனுப்பிவிட்டு சுமார் 7 வருடங்கள் கழித்து தற்பொழுது இந்த வழக்கை தாக்கல் செய்ய அருகதை இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 01.11.2025 கையெழுத்து செய்துள்ளார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.11.01 15:31:23 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.